## இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் - 2016

---

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்துக்களினது மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் கீழே காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்

2005 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அமைச்சரைவைக் குறிப்பு இலக்கம் 05/0994/029/013 இன் பிரகாரம் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் முறையாகக் கூட்டிணைக்கும் வரை மத்திய போக்குவரத்துச் சபையின் ஓரங்கமாக தொடர்ந்து நடாத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு 12 ஆண்டுகள் கடந்தும் இக்காலப்பகுதியின்போது நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கு இயலாதிருந்தது.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை நிதிசார் கூற்றுக்களில் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் நன்கொடையாக 2016 சனவரியில் ரூபா 4,768,000 பெறுமதியான ஹைபிரிட் தொழில்நுட்ப உபகரணங்களையும் ஹைபிரிட் மோட்டார் கார் ஒன்றையும் பெற்று அவற்றின் பெறுமதியைக் கணக்கிலிடாதிருந்தது. இவை சொத்துப் பதிவேடுகளில் பதியப்படவுமில்லை. மேலும், இதன் பொருட்டு சுங்கத்திற்கும் அவை தங்க வைக்கப்பட்ட இடத்திற்கும் ரூபா 353,835 மீண்டுவருஞ் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடைந்திராத இரு ஒப்பந்தப் பணிகள் பொருட்டு ரூபா 20,536,172 கொடுப்பனவு செய்யப்பட்டு நடைபெறும் வேலையாகக் கணக்கிலிடப்படாது கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கடன்பட்டோர் | 3,958,817 | கடன்பட்டோர் பதிவேடு, மீதிகளது உறுதிப்படுத்தல் |
| (ஆ) | உதிரிப்பாகங்கள், எழுதுகருவி வகைப் பொருட்கள், பூசுவதற்கான மை | 7,255,216 | நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கை |

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூபா 3,958,817 ஆகும். அதில் 77 சதவீதமான ரூபா 3,037,021 மூன்று தொடக்கம் 11 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்குரியனவாகும்.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் அண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 10, 11 ஆம் பிரிவுகள், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி மற்றும் 2000 யூன் 27 ஆந் திகதிய எவ்/பீஈ/9 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | திறைசேரியின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி நிறுவகம் ரூபா 23,929,269 ஐ நிலையான வைப்பிலும் ரூபா 8,850,137 ஐத் திறைசேரி வைப்பிலும் முதலீடு செய்திருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 756 | ஒவ்வொரு ஆண்டிலும் டிசெம்பர் 15 அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டுமாயினும், நிறுவகம் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதியளவிலும் 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுக் குழுவை நியமித்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 772 | 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின்போது தகுதி அற்றனவாக இனங்காணப்பட்ட 111 கூறுகளைச் சேர்ந்த பொருட்கள் சம்பந்தமாக கணக்காய்வுத் தினமாக 2017 யூன் 10 ஆந் திகதியளவிலும் நிதிப் பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின்போது நிறுவகத்தின் செயற்பாட்டினால் விளைந்த நிதிப் பெறுபேறு ரூபா 5,833,292 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டினது பற்றாக்குறை ரூபா 48,910,721 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 54,744,013 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. திறைசேரியினது மீண்டுவரும் மானியத்தில் ஏற்பட்ட ரூபா 42,000,000 அதிகரிப்பு மேற்படி அதிகரிப்பிற்கான முக்கிய காரணியாகும்.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2012 முதல் 2015 வரை தொடர் பற்றாக்குறை அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் மிகை ஏற்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம், அரசிற்குக் கொடுப்பனவு செய்த வரி என்பன மீண்டும் சீராக்கலுக்குள்ளாகையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 139,798,634 ஆகவிருந்த பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் ரூபா 333,314,727 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறுவகத்திற்குச் சொந்தமான கட்டுபெத்தைப் பயிற்சி நிலையத்திலும் பொரளை கிளையிலும் 1896 மாணாக்கர் கலந்து கொள்ளும் 12 கற்கை நெறிகள் நடத்தப்பட்டவாறிருந்தன. உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் உயர்ந்த நன்மதிப்புள்ள மோட்டார் தொழில்நுட்பத்துறையில் வேலை வாய்ப்புகளுக்குப் பொருந்தி வருமாறான தொழில்சார் பயிற்சியைப் பெறக்கூடிய இக் கற்கை நெறியின் பொருட்டு வருடாந்தம் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் அதிகரித்தவாறிருந்தும் நிறுவகம் அக்கோரிக்கைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியவாறு பயிற்சிக்கான அதன் சுற்றோட்டத்தை வியாபித்திருக்கவில்லை. அதற்கமைய, கடந்த 5 ஆண்டுகளின்போது கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்த 10,318 மாணாக்கரில் 7,752 மாணாக்கர், அதாவது 75 சதவீதத்தினருக்கு பயிற்சிக்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், நிறுவகம் பணம் அறவிடாத 38 குறுகிய காலக் கற்கை நெறிகளை நடாத்தியிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் 2,802 மாணாக்கருடன் நடாத்தப்பட்ட இக்கற்கை நெறிகளில் 2016 ஆம் ஆண்டின்போது கலந்து கொண்டோரது எண்ணிக்கை 3,943 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிறுவகம் நடாத்திய 12 கற்கை நெறிகளில் 258 மாணாக்கர் கலந்து கொண்ட 04 கற்கை நெறிகள் கட்டணமற்றனவாகும்.

(இ) வருடாந்தச் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆயுத இயந்திரப் பிரிவுக்கு இரசாயனகூடம் ஒன்றை நிர்மாணித்தல், கட்டிடப் புனரமைப்பு, இயந்திரங்களையும் உபகரணங்களையும் பொறித்தொகுதிகளையும் கொள்வனவு செய்தலுக்கென ரூபா 48.6 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 29.67 மில்லியன் செலவழிக்கப்பட்டுக் குறித்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுமிருந்தன. எவ்வாறாயினும், திட்டமிட்டவாறு அந்நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாததுடன் நிதியேற்பாட்டில் ரூபா 18.93 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியுமிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் தலைமையகம் அமைந்துள்ள காணி அடங்கலாக நிறுவகம் நெடுங்காலமாகப் பயன்படுத்தி வரும் ரூபா 1,149,350,000 பெறுமதியான காணியினது உரித்தைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் பகுதிவாரியான நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிக்கு ரூபா 1,663,270 பெறுமதியான புத்தகங்கள் நிறுவகத்திற்குக் கிடைக்கப் பெற்றபோதும், கடந்த 04 ஆண்டுகளின்போது ஏனைய கற்கை நெறிகளுக்குத் தேவையான புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நூலக அபிவிருத்தி என்பவற்றிற்கு நிறுவகம் செலவு எதனையும் மேற்கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக, முழு நேர, குறுகிய நேர கற்கை நெறிகளைக் கற்கும் மாணாக்கர் நாளதுவரையாக்கப்பட்ட அறிவைப் பெறும் அவகாசத்தை இழந்திருந்தனர்.

(இ) நிறுவகம் மீளாய்வாண்டின்போது 250 நாட் குறிப்புகளின் மூலம் ரூபா 3,312,825,751 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்திருந்ததுடன், அந்நாட் குறிப்புகளுக்கான விபரம் அடங்கிய நாட் குறிப்பு உறுதிச் சான்றுகளைத் தயாரித்திருக்கவில்லை. அத்துடன் அதனுடன் தொடர்புடைய தகவல்களைக் கோவைப்படுத்தாமை, முறையாக பரிந்துரையுடனும் அங்கீகாரத்துடனும் அல்லாத நாட்குறிப்புகளைப் பயன்படுத்தியமை போன்ற குறைபாடுகளின் காரணமாக அக்குறிப்புகள் முறையான அங்கீகாரத்துடன் சரிவர ஏற்படுத்தப்பட்டவையா என்பது உறுதியாகாதிருந்தது.

(ஈ) இயந்திரப் பிரிவு மற்றும் என்ஜின் பிரிவு என்பவற்றின் கூரையை அமைப்பதற்கு 2015 ஆம் ஆண்டின்போது ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 658,897 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணமின்றி அவ்வொப்பந்தத்தை நிறுவகம் நிறுத்தியிருந்தது. நிறைவடைந்த வேலைப் பகுதியை நிச்சயித்து, தேவையான கணக்கீட்டுக் குறிப்புகளை ஏற்படுத்தி ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எத்தனிக்காது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை தொடர்ந்தும் நிலையான சொத்துக்களுக்கான முற்பணமாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கற்கை நெறிகளில் பங்குபற்றும் பயிற்சி பெறுபவர்களின் பொருட்டு ஆபத்தான நிகழ்வொன்றின்போது இழப்பீட்டை வழங்குவதற்கென பயிற்சி பெறும் ஒருவரிடமிருந்து ரூபா 275 வீதம் அறவிட்டு 1999 ஆம் ஆண்டில் பயிற்சி பெறுவோர் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதன் மீதி ரூபா 8,898,814 ஆகவிருந்தது. எவ்வாறாயினும், அந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் மாணாக்கருக்குப் பங்களிப்பு வழங்கும் முறையான விதி முறைகள் தயாரிக்கப்படாது நிலையான வைப்பில் பணத்தை முதலீடு செய்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதன் பெறுமதி ரூபா 7,068,807 ஆகவுமிருந்தது.

(ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய சேமலாப நிதியமாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 6,425,019 இல் இலங்கை போக்குவரத்துச் சபையிலிருந்து வந்திருந்த ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ஊழியர் சேமலாப நிதிய வட்டியாகிய ரூபா 3,374,233 மற்றும் 04 ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத் தொகையைப் பிணையாக வைத்துப் பெற்றிருந்த வீடமைப்புக் கடன் என்பவற்றின் பொருட்டு 2016 வரை சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்ளப்பட்ட ரூபா 892,215 என்பனவும் உள்ளடங்கியிருந்தன. 2014 முதல் மேற்படி கடன் மற்றும் வட்டி என்பன கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை மாத்திரம் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், மேலே குறிப்பிடப்பட்ட கடன் தவணைப் பணமும் வட்டி வருமானமும் மீண்டும் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதற்கோ அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கோ முயலாது அவை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) நிறுவகம் 2015 டிசெம்பர் தொடக்கம் புதிய ஊழியர் கூட்டிணைப்பின் கீழ் சம்பள ஏற்றத்துடன் சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தபோதும், அதன் பொருட்டு 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் நிர்ணய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. ஆகவே, 2016 ஆம் ஆண்டில் சேவை நீங்கிய 05 உத்தியோகத்தர்களது பணிக்கொடையைக் கணிப்பிடுகையில் கூட்டிணைப்பின் மூலம் பெறப்பட்ட சம்பள ஏற்றம் கருத்திற் கொள்ளப்படாது போனது.

### 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உற்பத்தித் தொழில்நுட்பக் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு (PRODUCTION TECHNOLOGY) 2016 டிசெம்பரில் ரூபா 240,496,777 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2017 யூன் 07 ஆந் திகதியளவிலும் அக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் குறித்த உபகரணங்கள் பயனற்று இருந்தன.

(ஆ) நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையில் உபயோகப்படுத்தவதற்காக ரூபா 328,324 செலவில் தயாரிக்கப்பட்ட அரைவாசி முடிவடைந்த நிலையிலான நாற்காலிகளது கையிருப்பு வேலை முடிவடைந்து. பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2015 ஆம் ஆண்டு முதல் நிறுவகத்தின் வளாகத்தில் அவை அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 7,009,874 பெறுமதியான உதிரிப் பாகக் கையிருப்பில், ரூபா 69,309 பெறுமதியான 9 விடயங்களுக்குரிய 308 கூறுகள் 20 ஆண்டுகளுக்கு மேலாகவும், ரூபா 137,640 பெறுமதியான 69 விடயங்களுக்குரிய 5413 கூறுகள் 10 முதல் 20 ஆண்டுகளாகவும், ரூபா 225,303 பெறுமதியான 57 விடயங்களுக்குரிய 5,873 கூறுகள் 2 முதல் 10 ஆண்டுகளாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 சனவரி 20 ஆந் திகதியன்று ரூபா 5,487,905 பெறுமதியான 3 நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

(i) மேற்படி 3 ஒப்பந்தங்களுள் ரூபா 4,109,411 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி வேலை முடிவடைய வேண்டிய 2 ஒப்பந்த வேலைகள் குறித்தவாறு முடிவடையாததால் அவை 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தன. வேலை முடிவடைந்த மற்றைய ஒப்பந்தமான பிரதான நுழைவாயில் கூரையையும் பீலியையும் பழுதுபார்க்கும் பணிக்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது சிபாரிசுக்கமைய ரூபா 1,774,647 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த நியமங்களுக்கேற்ப அவை நிறைவடையவில்லை எனத் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவரும் நிறுவகத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுமிருந்த பிரதித் தலைமைப் பொறியியலாளர் (வேலைகள்) வழங்கிய அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 வழிகாட்டலுக்கு முரணாக இவ்வொப்பந்த விடயங்களுக்குரிய கடிதங்கள் ஒப்பந்தம் வழங்கப்பட்டு 16 நாட்களின் பின்னர் தாமதமாகவும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது ஒப்பந்தம் வழங்கப்பட்டு 18 நாட்களின் பின்னரும் நடைபெற்றிருந்தன.

(iii) உடன்படிக்கைப் பிரகாரம், 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்று இரத்துச் செய்யப்பட்ட 2 ஒப்பந்தங்களும் வேலையை நிறைவேற்றி ஒப்படைக்கப்பட வேண்டிய 2016 பெப்ரவரி 17 முதல் தாமதமாகிய 187 நாட்களுக்கும் நாள் ஒன்றிற்கு உடன்படிக்கைக்குள்ளான தொகையில் 1/4000 வீதம் ரூபா 292,658 கூட்டுத் தொகை தண்டப் பணமாக அறவிடப்பட வேண்டியபோதும், அவ்வாறாக நடைபெற வில்லை.

(iv) ஒப்பந்தங்களுக்குரிய செயலாற்றல் பிணை முறி 2017 சனவரி 11 வரை செல்லுபடியானபோதும், உடன்படிக்கைக் காலத்தின்போது குறித்த நியமத்துக்கேற்ப வேலை முடிவடையாததால் நிறுவகத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்றான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(v) ஒப்பந்த உடன்படிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக் கொடுப்பனவில் 10 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இரத்துச் செய்யப்பட்ட வெல்டிங் பிரிவினது வகுப்பறை மற்றும் கூரை என்பவற்றைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 1,310,915 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தபோதும், 2017 பெப்ரவரி 01 ஆந் திகதியளவில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் மற்றும் வேலைத்தளத்தில் எஞ்சியிருந்த பொருட்களது பெறுமதி ரூபா 1,069,817 மாத்திரமே ஆதலால் ரூபா 241,098 அதிகளவில் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட 20 வேலைகளுக்குள் ரூபா 1,875,500 பெறுமதியான 12 வேலைகள் முடிவடையவில்லையென்றும் முடிவடைந்த வேலைகளும் நியமங்களுக்கேற்ப இருக்கவில்லையென்றும் நிறுவகத்தின் பிரதிப் பிரதான பொறியியலாளர் எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

(ஆ) வருடாந்தம் அதிகரித்து வரும் நிறுவகத்தின் மாணாக்கருக்கு வதிவிட வசதிகளை வழங்கும் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் 1000 மாணாக்கர் தங்குவதற்கான விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2016 வரவு, செலவுத் திட்டத்தில் ரூபா 160 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தபோதும், அத்தொகையைப் பயன்படுத்தி அப்பணி நிறைவேறவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்ற நிதியைப் பயன்படுத்தி இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. எனினும், கணக்காய்வுத் தினமான 2017 யூன் 10 வரை இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர்த்தாங்கி ஒன்றை ரூபா 583,000 மதிப்பீட்டுக் கிரயத்தில் நிர்மாணிப்பதற்கான வேலை 2013 நவெம்பர் 15 ஆந் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2014 செப்டம்பர் 25 ஆந் திகதியளவில் வேலை முடிவடைந்து ரூபா 688,300 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மூலத் திட்டத்தின் பிரகாரம் 5000 லீட்டர் தாங்கிகள் 02 அமைக்கப்படுவதற்கு ஏற்பாடாகியபோதும், வேலை முடிவடைந்ததன் பின்னர் அதன் சக்தி தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இரண்டு 2000 லீட்டர் நீர்த்தாங்கிகள் மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, நிறுவகம் திட்டமிட்டவாறு நீர்த்தாங்கியின் சுற்றோட்டத்தை 60 சதவீதம் களஞ்சியப்படுத்துவது முடியாது போனதுடன், அதன் சக்தியை அதிகரிப்பதற்கு மீண்டும் ஒரு தூண் ஒன்றை அமைக்க வேண்டியேற்பட்டதால் நிறுவகம் மேலும் ரூபா 133,632 இழப்பிற்குள்ளானது.

(ஈ) 2016 டிசெம்பர் 05 ஆந் திகதி வேலையை நிறைவேற்றும் உடன்பாட்டுடன் ரூபா 7,015,575 மதிப்பீட்டில் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் இயந்திரவியல் பிரிவின் வகுப்பறையையும் பரிசோதனைக் கூடத்தையும் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த செயலாற்றல் பிணை முறி 2017 ஏப்ரல் 03 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் கணக்காய்வுத் தினமான 2017 யூன் 10 வரை இந் நிர்மாண வேலைகள் முடிவடையாத நிலையிலும் கால நீடிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 பிரிவுக்கு முரணாக இவ்வொப்பந்தத்திற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது ஒப்பந்தம் வழங்கப்பட்டு 63 நாட்களின் பின்னரே நடைபெற்றிருந்தது.

### 4.6 பதவியணி நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 268 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் 15 ஊழியர்களுக்கான வெற்றிடம் நிலவியது. இவ்வெற்றிடங்களுக்குள் நிறுவகத்தின் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை நிறைவேற்றுவதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதில் நேரடித் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய பதிவாளர் பதவி 03 ஆண்டுகள் வெற்றிடமாக இருந்ததுடன், மத்திய முகாமைத்துவ பதவிகளில் 12 வெற்றிடங்களும் நிலவின.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டினது உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தில் செயற்படுத்தப்பட்டவாறிருந்த 07 செயற்திட்டங்கள் சம்பந்தமாக கணக்காய்வை மேற்கொள்வதற்கு 3,865 மனித வேலை மணித்தியாலம் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின்போது அதில் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிராததுடன், அமுலாக்கப்பட்ட 02 நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய 05 கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டு அவற்றிற்கான பதில் 2017 யூன் 10 ஆந் திகதி வரை பெறப்படாதிருந்தது.

## 5.2 பொருட் கொள்வனவுத் திட்டம்

நிறுவகம் மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்கையில் பொருட் கொள்வனவுத் தேவைகளைச் சரிவரத் தீர்மானித்து முறைப்படி தயாரிக்கவில்லை என பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(அ) வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்காத ரூபா 6,304,401,273 கூட்டுத் தொகையுடைய இயந்திரங்களும் உபகரணங்களும் 12 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டமை.

(ஆ) பயிற்சிகளுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்கையில் ஒவ்வொரு பிரிவனதும் தேவைகளை ஏற்கனவே தீர்மானித்து நிறுவகத்திற்குச் சாதகமான விதத்தில் பொருட்களை வகைப்படுத்திக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 6,017,377 பெறுமதியான பயிற்சிக்கான உபகரணங்கள் 248 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டமை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே ஏற்பட்ட வேறுபாடுகளின் காரணமாக பாதீட்டுக் காலம் முடிவடைந்ததன் பின், அதாவது 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி நிறுவகத்தால் திருத்தஞ் செய்யப்பட்ட பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆலோசனைக் குழுவினது அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்கமைய, நிறுவகம் தயாரித்த வருடாந்தப் பாதீடானது பயனுள்ளதும் நிதிக் கட்டுப்பாடு உறுப்பாகவும் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் குறைபாடுகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் திருத்தஞ் செய்யப்படாதிருந்தன.

| பந்தியுடனான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|
| 2015-4.5(அ) | நிறுவகத்தின் பிரதிக் கல்லூரி அதிபர் பதவிக்கு முறையான நியமனமோ அங்கீகாரமோ இல்லாது பதில் கடமையாற்றிய உத்தியோகத்தருக்கு 2014 யூன் 30 முதல் 2016 ஆகஸ்ட் 30 வரையான காலப்பகுதியின் போது ரூபா 512,839 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| 2015 -4.5(ஆ) | நிறுவகத்தின் சேவையிலிருந்து விலகி தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் தாபனப் பணிப்பாளரின் அங்கீகாரமின்றி தொடர்ச்சியாகப் பணியாற்றிய உத்தியோகத்தராகக் கருதப்பட்டு சேவை ஆற்றாத காலத்திற்கும் ரூபா 105,402 முழுச் சம்பளம், படி என்பவற்றுடன் தொடர்புடைய சம்பள அளவுத் திட்டமும் வழங்கப்பட்டிருந்தது. |
| 2015 - 5.1 | 2012 - 2016 கூட்டிணைந்த திட்டத்தின்படி நிறுவகத்தின் இலக்கும் நோக்கும் ஈடுடேற்றப்படுவதற்குத் தடையாக இருப்பனவாக இனங்காணப்பட்ட நூலக வசதி இன்மை, தரவு மூலமும் நிலைமை முகாமைத்துவ முறைமையும் இன்மை மற்றும் சுயேச்சையான நிறுவனமாக நிறுவப்படாமை போன்ற குறைபாடுகளைத் திருத்தஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்ட காலம் கடந்திருந்தும் நிறுவகத்தால் இவை இயலாது போனமை. |

| | |
|---|---|
| 2014 - 4.2(அ) | கணக்கீட்டைக் கணனிமயப்படுத்தும் ரூபா 1,103,200 பெறுமதியான மென் அணி முறைமை ஒன்றை நிறுவுவதற்கு ரூபா 591,100 செலவிட்டிருந்தபோதும், அதில் உள்ள குறைபாடுகள், வழுக்கள் என்பன காரணமாக அம்முறைமையை செயற்படுத்த முடியாது போனதுடன் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்குக் கணனி மென் அணி முறைமையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையும். |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) மனிதவள முகாமைத்துவம் | நெடுங்காலமாக உயர் முகாமைத்துவ மட்டத்திலான பதவி வெற்றிடங்களை நிரப்புவதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிராததுடன் சேவைக்கான பிரமாணக் குறிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அமைப்பு சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமை. |
| (ஆ) கணக்கீடு | நிதிசார் தகவல்கள் சரிவர அறிக்கையிடப்படும் விதத்தில் கணனிமயப்படுத்தப்பட்ட முறையான கணக்கீட்டு முறைமை பேணப்படாமை. |
| (இ) கடன்பட்டோர் மற்றும் அறவிடப்பட வேண்டிய வருமானம் தொடர்பான கட்டுப்பாடு | அறிக்கைகளை முறைப்படிப் பேணி அறவிடப்பட வேண்டிய வருமானத்தைக் குறித்த காலத்திற்குள் அறவிடாமை |
| (ஈ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | நிறுவகம் அமுலாக்கிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படுகையிலும் அமுலாக்கப்படுகையிலும் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்குப் பொருந்துமாறு உயர் தன்மையுடனும் போதியளவு அபிவிருத்தி வாய்ந்ததுமாக அதனைப் பேணுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தாததுடன் கற்கை நெறிகளுக்கு மாணாக்கரைச் சேர்த்துக் கொள்வதை அதிகரிப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தங்களை பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கமைய முறையான நியமத்துடனும் திட்டமிடப்பட்ட காலத்திற்குள்ளும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திராமை. |